[20th March 1959

SRI S. A. M. ANNAMALAI ODAYAR : பிராவிடண்ட் பண்ட் பணம் புருஷன் செத்த பிறகு அவரின் மனைவி வாங்குவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இதை மாற்றுவதற்கு அரசாங்கம் யோசனை செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றித் தகவல் இல்லை. அங்கத்தினர் விவரம் கொடுத்தால் கவனிக்கப்படும்.

Setting up a sugar factory at Pennadam

9-00 a.m. * 688 *Q.*—SRI M. SELVARAJ : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா.—

(அ) தென் ஆற்காடு மாவட்டத்தில் விருத்தாச்சலம் தாலூகாவில் பெண்ணாடத்தில் கூட்டுறவு முறையில் சர்க்கரை ஆலை நிறுவுவதற்கான சிபாரிசு மத்திய அரசாங்கத்திற்கு செய்தது என்ன ஆயிற்று ?

(ஆ) இந்த ஆலை நிறுவுவதற்கு எவ்வளவு பணம் தேவை ?

(இ) எப்பொழுது இந்த ஆலையை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) *to* (*c*) The hon. Member's attention is invited to the answer to Question No. 281 put by him and replied on 27th July 1957 and the statement correcting the reply to one of the supplementary questions laid on the table of the House on the 15th February 1958. On the representations made by the Sugarcane Growers' Association of Vriddhachalam, to start a co-operative sugar mill of not less than 800 tons daily cane crushing capacity at Pennadam, the Registrar of Co-operative Societies was asked to take steps to organise the Society. The promoters were asked to apply to the Government of India for licence under the Industries (Development and Regulation) Act 1951, and the Government of Madras decided to recommend the application, when made. However, the Co-operative Society was not registered and the share capital was not collected. Meanwhile, the Government of India advised the State Governments to 'go slow' in the matter of setting up new sugar factories on account of exchange difficulties and the large content of imported machinery required for setting up sugar factories. In November 1958, the Government of India again stated that it would not be possible to grant licences for import of sugar machinary for any more new factories. They have also requested State Governments that the organisation of new co-operative sugar mills factories need not be taken up.

The Government of Madras are examining the prospects of obtaining sugar mill machinery from local manufacturers, but the prospects of establishing the co-operative sugar mills at Pennadam are not bright.

SRI M. SELVARAJ : இப்போது நமது மாநிலத்தில் இருக்கும் சர்க்கரை ஆலைகள் மொத்தம் 5 தான். அந்தப் பகுதியிலுள்ள மக்கள், அங்கே கூட்டுறவு முறையில் சர்க்கரை ஆலை அமைப்பதற்கு சுமார் 10 லட்சம் ரூபாய் வரை கொடுக்கத் தயாராகயிருக்கிறார்கள்.

20th March 1959]

சர்க்கரை ஆலையை அமைத்தால் நாம் வெளிநாட்டிற்கு சர்க்கரையை ஏற்றுமதி செய்து உணவு தானியத்தை இறக்குமதி செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இதை மத்திய சர்க்காரிடம் மறுபடியும் வற்புறுத்தி பெண்ணாடத்தில் எப்படியாவது சர்க்கரை ஆலையை அமைக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON SRI R. VENKATARAMAN : தென்னிந்தியாவில் உள் நாட்டிலேயே சர்க்கரை உற்பத்தி செய்யும் இயந்திரங்கள் செய்வதற்கான "கன்ஸார்டியம்" என்ற ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த ஸ்தாபனம், உள்நாட்டிலேயே சர்க்கரை உற்பத்தி செய்யக்கூடிய இயந்திரங்களைச் செய்யக்கூடுமானால் இந்தத் திட்ட யோசனையை நாம் மீண்டும் எடுத்துக்கொள்ளலாம். இப்போது அன்னியச் செலாவணி நெருக்கடி இருப்பதால் இப்போது அதை வற்புறுத்துவதில் பிரயோஜனமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI A. GOVINDASAMY : தமிழ் நாட்டில் கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளின் நன்மைக்கான ஆலைகளை ஏற்படுத்துவதில், இம்மாதிரி அன்னியச் செலாவணி நெருக்கடியைக் காரணமாகக் காட்டி, காலதாமதம் செய்வது சரியா ? அந்த சிபாரிசை மீண்டும் பரிசீலிக்கும்படி நமது சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்துமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : மத்திய சர்க்கார் இதில் காலதாமதம் செய்வது சரியா தப்பா என்ற கேள்வியை, கனம் அங்கத்தினரின் கட்சியைச் சேர்ந்த பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் பார்லிமெண்டில் போடலாம். நமது ராஜ்யத்தைப் பொறுத்தவரையில், உள்நாட்டிலேயே ஷுகர் மில் கன்ஸார்டியம் என்ற ஒன்றை அமைத்திருக்கிறார்கள். அந்த ஸ்தாபனம் அவசியமான இயந்திரங்களை தயாரிக்கக் கூடுமானால் இந்த சர்க்கார் இது சம்பந்தமாக எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும்.

SRI S. LAZAR : இப்போது உற்பத்தியாகும் சர்க்கரை நமது தேவைக்குப் போதுமான அளவில் இருக்கிறதா அல்லது அதில் பற்றாக் குறை இருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அகில இந்தியாவிலும் நமது தேவைக்குமேல் உற்பத்தியாகிறது.

Hospitals for workers

*913 Q.—SRI K. RAMACHANDRAN (on behalf of Sri SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Industries be pleased to state the details regarding the hospitals that are functioning for the benefit of workers?

THE HON. SRI R. VENKATARAMAN : A separate hospital with 78 beds exclusively for the benefit of workers under the Employees' State Insurance Scheme is functioning at Madras. Three hundred and twenty-two beds have been reserved in the various other hospitals in the State for insured workers. Private hospitals are functioning in 14 factories and in 34 plantations for the benefit of workers.

SRI S. PAKKIRISAMI PILLAI : சென்னையில் இருக்கும் இ.எஸ்.ஐ. ஹாஸ்பிடலில் நெருக்கடி அதிகமாக இருக்கிறது. அதன் காரணமாக அங்கேயுள்ள நோயாளிகள் மிகவும் கஷ்டப்படுவதால் வேறொரு ஆஸ்பத்திரி கட்ட வேண்டுமென்ற திட்டம் இருந்ததே. அத்திட்டம் இப்போது எந்த நிலையில் இருக்கிறது ? அந்த ஆஸ்பத்திரி இன்னும் எத்தனை வருஷங்களுக்குள் கட்டிமுடிக்கப்படும் ?